**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 167 of 2024

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : தீபிகா

Father's Name : சக்திவேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of September** 2025.

**(1ம், 2ம் எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது ஜல்லிபட்டியில் வசித்து தற்பொழுது கே பி ஆர் கல்லூரியில் பிகாம் படித்து வருகிறேன். ஒன்றாம் எதிரியை எனக்கு தெரியாது. இரண்டாம் எதிரி எனது தந்தை. 31.05.2024ம் தேதி என்று நான் ஜல்லிப்பட்டியில் இருந்து பேருந்தின் மூலம் உடுமலைப்பேட்டையில் உள்ள சிஎஸ்ஐ கணினி மையத்திற்கு சென்று கணினி வகுப்பு பயின்று முடித்து வீட்டிற்கு வருவதற்காக எனது தங்கை எனது தந்தையின் இருசக்கர வாகனத்தில் வந்து அழைத்துச் செல்வாள். நான் மதியம் சுமார் 1.45 மணி அளவில் பேருந்து நிறுத்தத்திற்கு வந்து எனது தங்கைக்கு போன் செய்து அழைத்தேன். அப்பொழுது எனது அம்மா மற்றும் அப்பா இருவரும் வீட்டில் இல்லை. எனது தங்கை என்னை அழைத்து வருவதற்காக எங்களது தந்தையின் இருசக்கர வாகனத்தை எடுத்து வந்தார்.

2. எனது தங்கை இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வடக்கு நோக்கி

வீட்டிற்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்த பொழுது எதிர் திசையில் வெள்ளை நிறத்தில் வந்த கார் எங்கள் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. எனக்கு வலது கால், தலை ஆகிய இடங்களில் அடிபட்டது. எனது தங்கைக்கு இடது கால், வலது கை ஆகிய இடங்களில் அடிபட்டது. ஆம்புலன்ஸ் மூலமாக எங்கள் இருவரையும் சூலூர் கேஎம்சிஎச் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எங்கள் இருவருக்கும் அறுவை சிகிச்சை செய்து நாங்கள் இருவரும் மருத்துவமனையில் 5 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்றோம். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது போலீசார் என்னை விசாரித்தார்கள். புகாரை நான் சொல்ல சொல்ல எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்கு விசாரணை 1 ம் எதிரி தரப்பில் முடிக்கப்பட்டது

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி எனது தங்கை வீட்டிலிருந்து வண்டி எடுத்துச் சென்ற பொழுது எனது தந்தை மற்றும் தாய் இருவரும் வீட்டில் இல்லை. அவர்களுக்கு தெரியாமல் தான் எனது தங்கை இருசக்கர வாகனத்தை கொண்டு வந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் எங்களது வீட்டிற்கும் சுமார் 200 மீட்டர் இருக்கும்.

<u>மறுவிசாரணை</u> இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.29 20:59:54 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**